47

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 0016/2021

நாள். 13.10.2021

திரு. M. சாமிநாதன்,
கும்பகோணம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கும்பகோணம் நகராட்சி – எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், மேலகாவேரி, சர்வமான்ய கீழதெரு, கதவு எண்.36 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. சாமிநாதன் என்பவரது 01.03.2021 நாளிட்ட முறையீட்டு மனு 03.03.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0016/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், மேலகாவேரி, சர்வமான்ய கீழதெரு, கதவு எண்.36 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. சாமிநாதன் அவர்கள் தான் 60 ஆண்டுகளாக மேற்கண்ட முகவரியில் வசித்து வருவதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட மனையில் இரண்டு குடிசை வீடுகள் உள்ளதாகவும் முன்பக்கம் வீடு பகுதி அவருடைய சகோதரர் கண்ணப்பன் என்பவருக்கும் பின்பக்கம் வீடும் மற்றும் நிலமும் தன் பங்காகவும் பாகபரிவினை மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்துள்ளார். திரு.சாமிநாதன் கட்டிய வீட்டுக்கு வரி கட்டியது வசூல் பதிவேட்டில் பதிவாகியுள்ளது என தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டில் மழை காரணமாக அவர் வீடு இடிந்து விட்ட காரணத்தினால் திரு.சாமிநாதன் அவர்கள் அருகே இருந்த சிறிய வீட்டிற்கு வாடகைக்கு குடியேறியதாகவும் சிறிது காலம் கழிந்து வீட்டினை பழுது பார்க்க வந்த போது தன் வீட்டின் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு ஏற்கனவே இருந்த மின் இணைப்பிற்கு தன் தம்பி திரு.M.கண்ணப்பன் பெயரில் முறைகேடாக மாற்றி கொண்டதாக திரு. சாமிநாதன் தெரிவித்துள்ளார். மேலும் அந்த மின் இணைப்பை கொண்டு கும்பகோணம் நகராட்சியில் எந்தவித வீட்டு ஆவணமும் இல்லாமல் சில ஆண்டுகள் தான் கட்டிய வீட்டு வரியை காண்பித்து குடி தண்ணீர் இணைப்பும் கழிவுநீர் இணைப்பிற்காக serial No. 002935 நாள். 21.05.2004 36/1396 for Rs.2000.00 For Water Supply New Connection Deposit amount & 002936 நாள். 21.05.2004 36/1396 for Rs.2500.00 for Drainage Deposit என ரசீதுகள் M.Kannappan பெயரில் பெற்றார். அதனை கொண்டு அவர் தன் பெயரில் இணைப்பு பெற முயற்சி செய்தது முடியாமல் போக மேற்கண்ட மு.கண்ணப்பனுக்கு எந்த வித வீட்டு ஆவணம் இல்லாதலால் அதன் பின் மு.கண்ணப்பன் மற்றும் மு.சாமிநாதன் என கூட்டு இணைப்பாக தன்னுடைய அனுமதியும் கையொப்பமும் இல்லாமல் நகராட்சியில் connection No.105/004/00226, old Connection No.105/11236 (Refer Receipt No.105/01/3/18-19/0001282, Dated 25.04.2018 மு.கண்ணப்பன் பெற்றுள்ளார். Property Tax address 36/1396 Sarvanmanya East Street Tax Assessment No.2845 Receipt No.4001547 Dated 21.04.2004 என்று முறைகேடாக வாங்கி இருவரின் பெயரில் குடிநீர் இணைப்பு பெற்று தனக்கு குடிநீர் வருவதை தடுத்தும் தனக்கு தனி இணைப்பும் இல்லாமல் அவதிபடுவதாக தெரிவித்துள்ளார். குடும்ப பாகப்பிரிவினையின்படி தன் அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை தவிர்த்து பாக்கி உள்ள சொத்தை தன் மனைவியின் பெயரில் கும்பகோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2018 ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் கிரையம் செய்து வைத்ததாக மு.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

2) 24.08.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடத்தப்பட்ட விசாரணையில் முறையீட்டு மனுதாரர் ஆஜரானார். விசாரணையின் போது அவர் ஒரு நீண்ட அறிக்கையை சமர்ப்பித்து அதையே தன் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால் வாக்குமூலத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டார்.

3) 24.08.2021 அன்று நடந்த நேரடி விசாரணையில் கும்பகோணம் நகராட்சி ஆணையாளர் ஆஜராகி கீழ்காணுமாறு தன் வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"மனுதாரர் திரு. M. சாமிநாதன் என்பவரின் வீட்டிற்கு குடிநீர் வசதி மற்றும் சாக்கடை வசதி குறித்து நகராட்சியால் பரிசீலிக்கப்பட்டது. மேற்கண்ட வீடு தொடர்பான வழக்கு கும்பகோணம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் (வழக்கு எண்.196/2018) நிலுவையில் உள்ளதாலும், சட்டத்தின்படி ஒரே சொத்து வரி விதிப்பிற்கு ஒரு குடிநீர் இணைப்பு மட்டுமே

சட்டப்படி வழங்க இயலும் என்பதாலும் மனுதாரர் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை எனினும், மனுதாரரின் வயதை கருத்தில்கொண்டும் மனிதாபிமான அடிப்படையிலும் அவரது வீட்டிற்கு அருகிலேயே பொதுக்குழாய் ஒன்று அமைத்து மனுதாரரின் குடும்பத்தினரால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன். மேலும் கும்பகோணம் நகராட்சியால் வழங்கப்படும் சொத்து வரி ரசீதில் 2015 ஆம் ஆண்டு முதல் இரண்டு பேரின் பெயரில் அதாவது திரு. சாமிநாதன் மற்றும் அவரது சகோதரர் திரு. கண்ணப்பன் என்பவரின் பெயரில் இருந்து வருகிறது. கும்பகோணம் நாகராட்சியின் சொத்துப் பதிவேடுகளை (Assessment Register) ஆய்வு செய்ததில் 01.04.2004 முதல் சொத்து வரி விதிப்பு எண்.105/004/00363-ன்படி மேற்கண்ட மனுதாரர் திரு.சாமிநாதன் மற்றும் அவரது சகோதரர் திரு.கண்ணப்பன் ஆகிய இருவரின் பெயரிலும் ஒரே சொத்து வரி விதிக்கப்பட்டு நகராட்சியால் வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் இணைப்பு எண்.105/004/00226 – 105/11236 மேற்கண்ட திரு.கண்ணப்பன் மற்றும் திரு. சாமிநாதன் ஆகியோரின் பெயரில் ஒரே குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் அதற்கான சொத்து வரி பதிவேடு மற்றும் குடிநீர் இணைப்பு பதிவேட்டின் நகலினை இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4) இம்முறைமன்ற முறையீட்டு மனு 0016/ந/2021 நாள்.26.03.2021-ல் மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு கும்பகோணம் நகராட்சி ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார். கும்பகோணம் நகராட்சி ஆணையர் தன் கடித எண்.7102/2021/அ2/நாள்.18.08.2021 மூலம் சமர்ப்பித்த அறிக்கையில் கும்பகோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4.36/1296 சர்வமான்ய கிழக்கு தெருவில் அமைந்துள்ள குடியிருப்பிற்கு எம்.கண்ணப்பன், எம்.சாமிநாதன் என்ற பெயரில் ஒரே சொத்துவரி விதிக்கப்பட்டு சொத்து வரி விதிப்பு எண்.105/004/00365) குடிநீர் இணைப்பு எண்.105/004/00226 வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு.எம்.சாமிநாதன் குடிநீர் இணைப்பு கோரி மனு செய்துள்ளார். இம்மனுவில் குடிநீர் இணைப்பு பெற தேவையான ஆவணங்கள் எதையும் இணைக்கவில்லை. எனவே மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்க தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் இம்மனைக்கு எம்.கண்ணப்பன், எம்.சாமிநாதன் என்ற பெயரில் குடிநீர் இணைப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் திரு.எம்.சாமிநாதன் அதே மனையின் பின்பகுதியில் குடியிருந்து வருகிறார். இவர் தனக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லையென மாநில தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

தமிழ்நாடு தகவல் ஆணையர் அவர்களின் ஆவண பரிசீலனையின் முடிவில் கும்பகோணம் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மனுதாரர் நேரில் சென்று தன்னிடம் உள்ள ஆவணங்களை இணைத்து இப்பொருள் தொடர்பாக மீண்டும் மனு அளிக்க மனுதாரருக்கு அறிவுறுத்தியது. அவ்வாறு மனுதாரர் மனு அளிக்கும்பட்சத்தில் மனுவின் மீது பதினைந்து நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையை தகவலாக மனுதாரருக்கு அனுப்பி வைக்க கும்பகோணம் நகராட்சி அலுவலக மேலாளர் பொதுத்தகவல் அலுவலருக்கு உத்திரவிட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தகவல் ஆணையர் அறிவுரையின் அடிப்படையில் மனுதாரருக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க அறிவிப்பு வழங்கப்பட்டது மேலும் மனுதாரரிடம் நேரில் சென்று சொத்துவரி விதிப்பு செய்ய உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை மனுதாரர் குடிநீர் இணைப்பு பெற தேவையான எவ்வித ஆவணமும், இணைத்து தகவல் ஆணைய உத்தரவின்படி விண்ணப்பிக்கவில்லை.

மாநில தகவல் ஆணையம், சென்னை, அவர்களின் 19.07.2021 தேதியில் நகராட்சி பொது தகவல் அலுவலரிடம் தொலைபேசி விசாரணையில், மேற்படி இடத்தில் வாசல் முன்பு ஒரு பொதுக் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கி இப்பிரச்சனையை முடிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

திரு.கண்ணப்பன், த/பெ. முனுசாமி என்பவரது மனுவில் கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் இச்சொத்து சம்பந்தமாக அசல் வழக்கு எண்.196/2018 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. இந்நிலையில் பாகம் பிரிபடாத சொத்தில் வேறு நபருக்கு தனது சகோதரர் சாமிநாதன் பொய்யான ஆவணங்களை தயார் செய்து பதிவு பாரதீனம் செய்துள்ளாக தெரிய வருகிறது என்றும், போலி ஆவண பத்திர பதிவை ரத்து செய்ய மாவட்ட பதிவாளரிடம் போலி ஆவணம் தயாரித்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல்துறை அலுவலரிடம் மனு கொடுத்துள்ளதாகவும், இச்சொத்தில் புதிய வரிவிதிப்புகள் ஏதும் ஏற்படுத்த வேண்டாம் என ஆட்சேபனை தெரிவித்துள்ளார். மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணையில் நில மோசடி புகார் எண்.4384/2018 தொடர்பாக, "மேற்படி TSLR பதிவேட்டின் அடிப்படையில் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிவைத்த திரு.எம்.சாமிநாதன் தான் சொத்தின் உரிமையாளர் என பதிவு அலுவலர் திருப்தியடைந்து ஆவணப்பதிவை மேற்கொண்டுள்ளார் என எடுத்துக்கொண்டால் கூட, இப்பிரஸ்தாப ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள TSLR பதிவேட்டின் நகலில் கலம் 19- இல் தற்போதைய நில உடைமைாரரின் பெயர் என்பதற்கு கீழ் "முனியப்ப படையாட்சி மக்கள் சாமிநாதன்" என குறிப்பிடப்பட்டுள்ளது. முனியப்ப படையாட்சி மக்கள் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மக்கள் என்றால் குறைந்தபட்சம்

2 நபர்களாவது இருக்க வேண்டும் என்ற சந்தேகம் பதிவு அலுவலருக்கு வந்திருக்க வேண்டும். மேலும் சாமிநாதன் -1 என குறிப்பிடப்பட்ட நிலையில் அடுத்த நபர்கள் வந்தால்தான் 1 என குறிக்கப்படும் என்ற சந்தேகம் பதிவு அலுவலருக்கு வந்திருக்க வேண்டும். மேலும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட TSLR பதிவேட்டின் நகலில் முனியப்ப படையாட்சி மகன் சாமிநாதன், முனியப்ப படையாட்சி மகன் கண்ணப்பன் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பதிவு அலுவலரான திரு.மா.திருஞானசம்பந்தம் சொத்துரிமைக்கு மூல ஆதாரமான TSLR பதிவேட்டை கவனமுடன் பரிசீலக்காமல் செயல்பட்டதன் மூலம் பதிவித்துறைத் தலைவர் ஆணை எண்.18339/இ1/2012 நாள் 25.04.2012 ஐ மீறி செயல்பட்டுள்ளார் என்பது ஊர்ஜிதமாகிறது என உத்தரவில் தெரிவித்துள்ளார்.

5) இந்நிலையில் ஏற்கனவே கண்ணப்பன், சாமிநாதன் என்ற பெயரில் சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டதினால் அதே பெயரில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மென்பொருளில் ஒரு சொத்து வரிவிதிப்புக்கு ஒரு குடிநீர் இணைப்புதான் வழங்கப்படும். மனுதாரர் தெரிவித்தது போல் ஏற்கனவே கண்ணப்பன், சாமிநாதன் பெயரில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பில் முறைகேடுகள் ஏதும் இல்லை. நகராட்சியின் விதிமுறைகளுக்கு உட்பட்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரராகிய திரு.எம்.சாமிநாதன் என்ற பெயரில் குடிநீர் இணைப்பு வழங்க அன்னாரால் நகராட்சியில் நாளது தேதி வரையில் எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை. மனுதாரர் மூத்த குடிமகன் என்ற அடிப்படையிலும், வாழ்வாதாரமான குடிநீர் அவசியம் கருதியும் மனுதாரருக்கு பலமுறை உரிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பித்ததால் சொத்து வரிவிதிப்பும், குடிநீர் இணைப்பும் அவருடைய பெயரில் வழங்க ஏதுவாக இருக்கும் என நகராட்சி மூலம் தெரிவித்தும், மனுதாரரின் இடத்தில் சொத்துப்பிரச்சனை உள்ளதாலும் அவரின் பெயரில் எவ்வித ஆவணங்களும் நகராட்சிக்கு சமர்ப்பிக்காமல் தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தொடர்ந்து மனு அளித்து வருகிறார் என நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

6) மாநில தகவல் ஆணையத்தில் 19.07.2021 ம் தேதிய அறிவுரையின்படியும், மனிதாபிமான அடிப்படையிலும், மனுதாரர் வசிக்கும் இடத்தின் வாசல் முன்பு 10.08.2021 அன்று பொதுக்குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு தற்போது மனுதாரரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் திரு.எம்.கண்ணப்பன் ஆகியோருக்கிடையே சொத்துப்பிரச்சனை நீதிமன்ற விசாரணையில் உள்ள நிலையிலும் மேற்படி மனுதாரர் திரு.எம்.சாமிநாதன் தமது மனைவிக்கு செய்து வைத்த செட்டில்மெண்ட்

ஆவணம் பதிவில் பத்திரபதிவுத் துறை தலைவரின் சொத்துரிமை தொடர்பான ஆணை எண்.18339/இ1/2012, நாள் 25.04.2012-ஐ பின்பற்றி செய்யப்படவில்லை என்பதால் நீதிமன்ற பரிபாலனம் மூலம் பரிகாரம் தேடி கொள்ளலாம் என்ற மாவட்ட பதிவாளரால் உத்தரவிட்டுள்ள நிலையிலும் மனுதாரருக்கு மூத்த குடிமகன் என்ற மனிதாபிமான அடிப்படையில் குடிநீர் வசதி ஏற்படுத்தி கொடுத்து அன்னாரது கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டது என கும்பகோணம் நகராட்சி ஆணையர் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

7) இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரது மனு, மனுதாரர் தன் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறு சமர்ப்பித்த அறிக்கை, கும்பகோணம் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அவர் அளித்த அறிக்கை ஆகியவை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன,

கும்பகோணம் நகராட்சியால் வழங்கப்படும் சொத்து வரி ரசீதில் 2015 ஆம் ஆண்டு முதல் இரண்டு பேரின் பெயரில் அதாவது திரு. சாமிநாதன் மற்றும் அவரது சகோதரர் திரு. கண்ணப்பன் என்பவரின் பெயரில் இருந்து வருகிறது. கும்பகோணம் நாகராட்சியின் சொத்துப் பதிவேடுகளை (Assessment Register) ஆய்வு செய்ததில் 01.04.2004 முதல் சொத்து வரி விதிப்பு எண்.105/004/00363-ன்படி மேற்கண்ட மனுதாரர் திரு.சாமிநாதன் மற்றும் அவரது சகோதரர் திரு.கண்ணப்பன் ஆகிய இருவரின் பெயரிலும் ஒரே சொத்து வரி விதிக்கப்பட்டு நகராட்சியால் வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் இணைப்பு எண்.105/004/00226 – 105/11236 மேற்கண்ட திரு.கண்ணப்பன் மற்றும் திரு. சாமிநாதன் பெயரில் ஒரே குடிநீர் இணைப்பாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் திரு.M.சாமிநாதன் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர்களின் பாகப்பிரிவினை செய்யப்படாத சொத்தாக உள்ளதாலும், இது சம்பந்தமான வழக்கு கும்பகோணம் கூடுதல் சார்பு நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளதாலும் (வழக்கு எண்.196/2018) சட்டத்தின்படி ஒரு சொத்து வரி விதிப்பிற்கு ஒரு குடிநீர் இணைப்பு மட்டுமே சட்டபடி வழங்க இயலும் என்பதால் மனுதாரர் திரு.M.சாமிநாதன் வீட்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் மனுதாரர் திரு.M.சாமிநாதன் அவர்கள் மூத்த குடிமகன் என்பதால் அவர் வசிக்கும் இடத்தின் வாசல் முன்பு 10.08.2021 அன்று மனிதாபிமான அடிப்படையில் பொது குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு தற்போது மனுதாரரால் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள ஆணையாளின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.சாமிநாதன்
சாமிநாதன் இல்லம்,
36, சர்வமான்ய கீழதெரு, மேலகாவேரி,
கும்பகோணம்.

2) நகராட்சி ஆணையர்
கும்பகோணம் நகராட்சி
கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

நகல்
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

நகல். இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.